

SRMU தலைவர் சி.ஏ.ராஜா ஸ்ரீதர் அவர்களின் வாழ்க்கைத் துணைவியார் திருமதி சாந்தி அவர்களின் மறைவையடுத்து, திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (23.06.2026) நேரில் சென்று, அவரது உடலுக்கு மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தி, குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார்.

## சூலூரில் எல்.மூ. மருதுபாண்டியன் படத்திறப்பு

கோவை, ஜூன் 25–

சூலூரில் அமைந்துள்ள கோவை தெற்கு மாவட்ட கழக அலுவலகத்தில் மறைந்த கோவை மாவட்ட குற்றவியல் நீதிமன்ற வழக்கறிஞர் சங்கத் தலைவர், தி.மு.கழக வழக்கறிஞர் அணி நிர்வாகி எல்.மூ.மருதுபாண்டியன் திருவுருவப் படத்திற்கு மாவட்டச் செயலாளர் தளபதி முருகேசன் தலைமையில் மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினர். இதில் சூலூர் தெற்கு ஒன்றிய செயலாளர் மன்னவன், அரசு வழக்கறிஞர்கள் கிருஷ்ணமூர்த்தி, மகேந்திரன், வழக்கறிஞர்கள் சந்திரன், கோவிந்த ராஜ், பேரூர் செயலாளர்கள் கௌதமன் (சூலூர்), விஸ்வநாதன் (கண்ணம்பாளையம்), மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர், வழக்கறிஞர் ரமேஷ் பாலன், கிணத்துக்கடவு பேரூராட்சி தலைவர் கதிர்வேல், சூலூர் பேரூராட்சி துணைத்தலைவர் சோலை கணேஷ், ஊராட்சி மன்ற முன்னாள் தலைவர் பார்த்தசாரதி, மாவட்ட தொழிலாளர் அணி துணைத் தலைவர் முருகேஷ், மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர் பூர்ண சந்திரன், கலங்கல் கிளை செயலாளர் சிவக்குமார், பிரபாகரன், வார்டு செயலாளர் பாலசுப்பிரமணியம் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## சின்னதம்பி பெரியதம்பி



**சின்னதம்பி :** ஏண்ணே; சட்டப் பேரவையில் முதல்வர் விஜய் பதிலுரை எப்படி இருந்தது ?

**பெரியதம்பி :** ஆமாம் தம்பி; ஏற்கனவே தயார் செய்யப்பட்ட 'ஸ்கிரிப்ட்'டை மனப்பாடம் செய்துகொண்டு மட்டும்தான் 'ஷூட்டிங்'கில் நடிக்க முடியும்; பார்த்துப் படிக்க அனுமதி இல்லை.

ஆனால் பேரவையில் 'ஸ்கிரிப்ட்'டைக் கையில் வைத்துக்கொண்டு, பார்த்துப் பேசவும், சினிமா பாணியில், பேசி நடிக்கவும், நக்கல் நையாண்டி செய்யவும் அனுமதி மறுக்கப்படுவது இல்லையே !

### கல்வி காவிமயம்! மாணவர்களின் உயிரைக் காவு கேட்கும் 'நீட்' தேர்வு! தி.மு.க. மாணவரணி சார்பில்

# ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து சென்னையில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!

### கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி. – அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி – மாவட்டச் செயலாளர்கள் – மாணவரணிச் செயலாளர் ஜெ.வீரமணி உட்பட 5000த்திற்கும் மேற்பட்டோர் கருப்பு உடை அணிந்து முழக்கம்!






**சென்னை, ஜூன் 25 -**

**நீட் தேர்வை ரத்து செய்ய வலியுறுத்தி, சென்னையில் தி.மு.க. மாணவரணி சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் ஐந்தாயிரத்திற்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டு கண்டன முழக்கங்களை எழுப்பினர்.**

பாசிச பா.ஜ.க. அரசால் இந்தியா முழுவதும் திணிக்கப்பட்ட 'நீட்' தேர்வில் ஒவ்வொரு ஆண்டும் மோசடிகள் முறைகேடுகள் அம்பலப் பட்டு வருகின்றன.

கழக ஆட்சியில் 'நீட்' தேர்வில் இருந்து முழு விலக்கு அளிக்க வேண்டும் என்று சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றி ஒன்றிய அரசுக்கு அனுப்பியும் இதுவரை எந்த நடவடிக்கையும் இல்லை. இந்த ஆண்டு நடைபெற்ற 'நீட்' தேர்வு இரத்து செய்யப்படுவதாக அறிவித்ததிலிருந்து மறு தேர்வு அச்சத்தால் இந்தியா முழுவதும் 15 மாணவர்கள் தற்கொலை செய்து கொண்டுள்ளனர்.

ஒவ்வொரு ஆண்டும் இந்தியா முழுவதும் மாணவர்கள் தற்கொலை செய்துகொண்டு செத்து மடிகின்றனர். இது பாசிச மோடி அரசால் நிகழ்த்தப்படும் பச்சைப் படுகொலையாகும்.

இத்தகைய நுழைவுத் தேர்வுகளையும் 'தகுதி'த் தேர்வுகளையும் இரத்து செய்யக் கோரி பாசிச மோடி அரசினை தி.மு.கழகம் தொடர்ந்து நிர்பந்தித்து வருகிறது.

அதேபோல் ஒன்றிய பா.ஜ.க. அரசு மொழிவாரி மாநிலங்களின் உரிமைகளைப் பறிப்பதிலும், தாய்மொழியைத் துறக்கச் செய்து, இந்தி மற்றும் சமஸ்கிருத மொழிகளை மக்களிடையே திணித்து அவர்களை இரண்டாந்தரக் குடிமக்களாக ஆக்கும் சதிச் செயலில் ஈடுபட்டு வருகிறது. 2014-ஆம் ஆண்டு ஒன்றியத்தில் பா.ஜ.க. ஆட்சி அமைந்ததிலிருந்தே, தமிழ்நாட்டில் வடமொழித் திணிப்பை கல்வி நிலையங்களில் பாடத்திட்டம் வழியாகவும் இதர பல்வேறு வகைகளிலும் செய்து வருகிறது.

**கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் கண்டித்துள்ளார்!**

தற்போது ஒன்றிய அரசுப் பள்ளிகளில் (CBSE) 9-ஆம் வகுப்பிலிருந்து 12-ஆம் வகுப்பு வரை சமஸ்கிருத மொழியைக் கற்க வேண்டும் எனும் திட்டத்தைச் செயல்படுத்திட ஒன்றிய மனிதவள மேம்பாட்டுத் துறை ஆணை பிறப்பித்துள்ளது.

இதனைத் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் வன்மையாகக் கண்டித்திருக்கிறார்.

எனவே, ஒன்றிய அரசின் இம்முயற்சிகளை தடுத்திட, கழகத் தலைவரின் அறிவுறுத்தலின்படி பா.ஜ.க. அரசின் 'நீட்' தேர்வு மற்றும் இந்தி, சமஸ்கிருத திணிப்பை கண்டிக்கும் வகையிலும், அவற்றை ரத்து செய்ய வலியுறுத்தியும் தலைநகராம் சென்னை மாநகர், சைதையில் "கலைஞர் பொன்விழா வளைவு" அருகில், நேற்று முன்தினம் (ஜூன் 23 - செவ்வாய்க் கிழமை) காலை 9.00 மணியளவில், தி.மு.க. மாணவர் அணி சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

**5000 மாணவர்கள் பங்கேற்றனர்!**

மாணவர் அணி செயலாளர் ஜெ.வீரமணி தலைமையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில், தி.மு.க. துணை பொதுச் செயலாளர் ஆ.ராசா எம்.பி., மாவட்டச் செயலாளர்கள் மா.சுப்பிரமணியன், நே.சிற்றரசு, மாதவரம் எஸ்.சுதர்சனம், திமுக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, துணை அமைப்பு செயலாளர் தாயகம் கவி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். கருப்பு நிற டிஷர்ட் அணிந்து 5 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் போராட்டத்தில் பங்கேற்று கல்வியை காவிமயமாக்கும் ஒன்றிய பாஜக அரசை கண்டித்து முழக்கங்களை எழுப்பினர்.

தி.மு.க. மாணவர் அணி துணை செயலாளர்கள் மன்னை சோழராஜன், தமிழரசன், செந்தில்குமார், தமிழ் அமுதரசன், ஆனந்த், கோகுல், பூரண சங்கீதா சின்னமுத்து, ராமகிருஷ்ணன், சுரேஷ் குமார் ஆகியோர் இந்தப் போராட்டத்திற்கு முன்னிலை வகித்தனர். போராட்டத்தின் போது, நீட் தேர்வு அச்சம் காரணமாக தற்கொலை செய்துகொண்ட மாணவர்களின் படங்களுக்கு, மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.